பக்கங்கள்: எட்டு

Nallur Branch Library

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

மலர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை (08-11-1996) UTHAYAN Lively National Tamil Daily இதழ் 265

# குடாநாடு, கொழும்பு, திருமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிதீவிரம்!

## தவறுதலாக வெடித்த குண்டுக்கு 2 படையினர் பலி!

கொழும்பு, நவ. 8

மன்னார் மாவட்டம் தள்ளாடிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினரின் கிரனேட் ஒன்று தவறுதலாக வெடித்ததில் இரு படையினர் உயிரிழந்தனர்; நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ-3)

## வவுனியாவில் பெரும் மோதல்!

கொழும்பு, நவ. 8

வவுனியா மேற்கு கணேசபுரம் பகுதியில் உள்ள படையினரின் இராணுவக்காவலரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை பெரும் தாக்குதல் ஒன்று இடம் பெற்றிருக்கின்றது.

ஆயுதம் தாங்கிய சுமார் நானூறு விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகவும் —

சுமார் மூன்று மணிநேரம் நீடித்த இத்தாக்குதலை பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் முறியடித்தனர் என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் 6 படையினர் பலி!

கொழுப்பு, நவ. 9

தென்மராட்சிப் பகுதியில் இராணுவக் காவலரண் பகுதி ஒன்றின் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆறு படையினர் உயிரிழந்ததாகக் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்று செய்தி வெளியிட்டன.

இச் சம்பவத்தில் உயிரிழந்த விடுதலைப் புலி ஒருவரின் சடலமும், ரி-56 ரக ஆயுதம் ஒன்றும் தொலைத் தொடர்புக் கருவி ஒன்றும் பின்னர் அப்பகுதியிலிருந்து படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்சப்பட்டது. (உ-3)

## கிழக்கில் புலிகள் அணி திரள்கின்றனர்

கிழக்குப் பிரதேசத்தில் காடுகளுக்குள் சிறு சிறு குழுக்களாக விடுதலைப் புலிகள் அணி திரண்டிருக்கின்றார்கள் என்று அப்பிரதேச பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைத்திருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

புலிகளின் பிராந்தியத் தலைவர் கருணா உட்பட பலர் மீண்டும் மட்டக்களப்புக்கு வந்திருப்பதாக பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியவந்துள்ளது. இதனால் இந்தப் பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது—என்று இலங்கை வானொலி அறிவித்தது. (உ-ரி)

## அம்பாறையில் தாக்குதல்?

மணிலா, நவ. 8

அம்பாறை மாவட்டம் மத்திய காவல் நிலையம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் சுமார் ஐந்து நிமிட நேரம் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இத்தாக்குதலில் பெருமளவு ஆயுதங்களையும் வெடிப்பொருள்களையும் புலிகள் கைப்பற்றியதாகவும் அச்செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. ஆனால் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் அத்தகைய தகவல் எதனையும் வெளியிடவில்லை. (உ-3)

## புலிகள் தாக்கலாம் என்பதால் துருப்புக்கள் உஷார் நிலையில்!

கொழும்பு, நவம்பர் 8

விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுவதால் அதனை ஒட்டி வடக்கு-கிழக்கில் அல்லது கொழும்பில் பெரும் தாக்குதல்களை அவர்கள் நடத்தக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இதன் காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் உயர் இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

யாழ் குடாநாடு, தலைநகர் கொழும்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் புலிகள் பெரும் தாக்குதலுக்கு முஸ்தீபு செய்யக்கூடும் என படை வட்டாரங்கள் கருதுகின்றன.

''அவர்கள் பெரிதாக ஏதோ ஒன்றைச் செய்ய முனைவார்கள் என எதிர்பார்க்கலாம்'' — என்று கொழும்பில் உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்.

''யாழ் குடாநாட்டில் பெரும் தாக்குதல் ஒன்றை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### களஞ்சியம் மீது தாக்குதல்

வாழைச்சேனை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் களஞ்சியம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலில் அங்கு காவலுக்கு நின்ற 3 பொலீஸார் காயமடைந்தனர்.

மேலதிக படையினர் அவ்விடத்துக்கு வருவதைத் தடுக்கும் வகையில் விடுதலைப்புலிகள் வாழைச்சேனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தையும் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பயணிகள் கப்பல் சேவை 28 ஆம் திகதியுடன் நிறுத்தம்

திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இம்மாதம் 28 ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருவப்பெயர்ச்சிக் காற்று மாறுவதை அடுத்து கடல் கொந்தளிப்பு ஏற்படலாம் என்ற காரணத்தினாலேயே இச்சேவை இடை நிறுத்தி வைக்கப்படவுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 28 ஆம் திகதி ''நரோமா'', ''தாரகி'', ''என்டூரன்ஸ்'' ஆகிய மூன்று கப்பல்களும் திருமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இவ்வருடத்துக்கான கடைசிச் சேவையை நடத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

### போரினால் செலவினம் அதிகரிப்பு:

## பட்ஜெட் பற்றாக் குறையைச் சமாளிக்க மீண்டும் சூதாட்டத்துக்கு அனுமதி!

கொழும்பு, நவ 8

யுத்தத்துக்கு பெருமளவு நிதி செலவிடப் படுவதால் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளது இதனை ஈடு செய்வதற்காக வரிகளை அதிகரிப்பதற்கும், தடைசெய்யப்பட்டிருந்த சூதாட்ட (கசினோ) விளையாட்டுக்கு மீண்டும் அனுமதி அளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தகவல் வெளியிட்டுள்ளது.

பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் 1990 இல் சூதாட்டம் தடை செய்யப்பட்டது. ஆனால் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இதுவே மிகவும் முக்கியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் 45 கோடி ரூபா மேலதிக வருமானம் அரசுக்குக் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்றுமதி உற்பத்திகளுக்கும், மூலப் பொருள்களின் இறக்குமதிக்கும் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் இறக்குமதி செய்யப்படும் புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வாகனங்களின் இறக்குமதி வரி அதிகரிக்கப் பட்டுள்ளது.

முன்னர் சுங்க வரியின்றி இறக்குமதி செய்யப் பட்ட அனைத்துப் பொருள்களுக்கும் இப்போது 5 வீத சுங்க வரி அறவிடப்படவுள்ளது. (உ-10)

## பொருளாதாரம் பெரும் பின்னடைவு!

### சாடுகிறார் றொனி டி மெல்

கொழும்பு, நவ. 8

1977 இற்குப் பின்னர் இதுவரை எப்போதும் இல்லாத அளவுக்கு இன்று நாட்டின் சில்லறை — மொத்த வியாபாரம், தொழில்துறை, பொருளாதாரம், முதலீடுகள் அனைத்தும் அதள பாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன; பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

— முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

''நண்பகல் 12 00 மணிக்குப் பின்னர் புறக்கோட்டைக்குப் போனால் உதைபந்தாட்டம் ஆடலாம்; அங்கு வியாபாரம் இல்லை. கோட்டைக்குச் சென்றால் கிரிக்கெட் விளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் எழுச்சிக் கூட்டம்

வடக்கு-கிழக்கு நிலைமை, மனித உரிமைகள் மீறல்கள் ஆகியன தொடர்பான எழுச்சிக் கூட்டம் இன்று வெள்ளிக் மழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் ஏற்பாடு செய்துள்ள இக் கூட்டத்தில் ஆயர் கெனத் பெர்னாண்டோ, பெளத்த பிக்கு பத்தேகம சமிந்த தேரர் மற்றும் தமிழ் எம். பிக்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## நெ. ஆ. சுவாமிநாதன்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட (மல்லாகம்) நெல்லிநாதர் ஆறுமுகம் சுவாமிநாதன் அவர்கள் 07 - 11 - 96 வியாழக்கிழமை அமரத்துவ மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற (மல்லாகம்) தெய்வ நாயகியின் அன்புக் கணவரும், சுவாமிநாதன் யோக நாதன் (மாலைதீவு), திருமதி கலியுகவரதி சண்முக நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகெங்கா தேவி யோகநாதன் (தெல்லிப்பளை ஆறுமுகசுவாமி மகள் - சங்கீத ஆசிரியை, மன்னார்), சண்முகநாதன் (யாழ். உதவி விலை மதிப்பீட்டாளர்) ஆகியோரின் மாமனாரும், சிவபிருந்தா, சிவதர்ஷன் (மன்னார்), தயானந்தன், தயாளினி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07 - 11 - 96 வியாழக்கிழமை (சிவன் கோவில் முன்றல்), சாவகச்சேரியில் நடைபெற்று, சாவகச்சேரி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நிறைவேறின.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

ச. தி. சண்முகநாதன்
(யாழ். உதவி விலை மதிப்பீட்டாளர்)

சிவன் கோவில் முன்றல்,
சாவகச்சேரி.
(43549)

## பொன்னம்பலம் பாலசிங்கம்

03 - 11 - 96 அன்று காலமாகிய பொன்னம்பலம் பாலசிங்கம் (முன்னாள் உரிமையாளர், விமலா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களது இறுதிக் கிரியைகள் இன்று 8 - 11 - 96 காலை 10 மணியளவில் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
கி. சிவராசா
(மருமகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.
(43554)

## வேலுப்பிள்ளை இராஜகோபாலரட்ணம்

புன்னாலையைப் பிறப்பிடமாகவும் அராலி மத்திய பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராஜகோபாலரட்ணம் வியாழக்கிழமை 7 - 11 - 96 காலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், மனோகரி (யா/வட்டு. இந்துக்கல்லூரி மாணவி), பதும தாஸ், பரிமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினத்தின் (புனர்வாழ்வுக் கழகம்) மைத்துன ருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-11-96) காலை 10-00 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. அன்னம்மா
(மனைவி)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
(43555)

## வேலுப்பிள்ளை - திரவியம்

பாடசாலை வீதி, ஆறுகால்மடம் ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை-திரவியம் 06-11-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திருமதி வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், திரேசாவின் அன்புக் கணவரும், தவதேசன் (இத்தாலி), சாந்திபவானி (கொழும்பு), வதனி (கனடா), காந்தரூபன் (இத்தாலி), எமில்டரூபன், மாலினி, சயந்தரூபன் (இத்தாலி), விமலரூபன் (மாணவன், யா/கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாசரன் (இத்தாலி), மலக்கியாஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தையா, காலஞ்சென்ற சோமு, பூமணி, பரமேஸ்வரி, சிவமணி, துரைரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பெரியதம்பி (சிற்றி மெடிக்கல், யாழ்.), செல்லம்மா (பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான செல்லம்மா, இராசமணி, சின்னத்துரை மற்றும் சின்னத்துரை, இராசலிங்கம் (பூச்சி), தங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
துரைரத்தினம்
(சகோதரன்)

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(43557)

# ஈழ அகதிகள் போர்வையில் புலிகள் தமிழகத்துக்குள் நுழைய முடியாதாம்!

### காவல்துறை அதிகாரி கூறுகிறார்

சென்னை, நவ. 8

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு கடந்த மூன்று மாதங்களில் சுமார் ஐயாயிரம் தமிழ் அகதிகள் வந்துள்ளனர். அவர்களைப் பற்றிய முழு விவரமும் இலங்கை அரசிடமிருந்து பெற்ற பின்பே அவர்கள் அகதிகள் முகாம்களில் சேர்க்கப்படுவதால் இலங்கைத் தீவிரவாதிகள் எவரும் அகதிகள் என்ற போர்வையில் நுழைய வாய்ப்பில்லை. — இப்படி தமிழக காவல் துறையின் சட்டம், ஒழுங்குப் பிரிவின் தலைவர் பி.காளிமுத்து தெரிவித்தார்.

நேற்றுப் பாளையங் கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் விடுதலைப் புலியினரின் நடமாட்டத்தை முற்றாகத் தடுக்க சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் நீள முள்ள தமிழக கடற்கரை முழுவதும் தீவிர கண்காணிப் புப் பணிகள் மேற் கொள்ளப் பட்டு வருவதாகக் கூறினார்.

இப் பணியில் தமிழ் நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதப்படை, மத்திய காவல் படை மற்றும் கடலோரக் காவல் படை ஆகியன ஈடு படுத்தப்பட்டுள்ளன. பெற்றோல், டீசல், மருந்துப் பொருள்கள் போன்றவை கடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் 32 கடத்தல் புள்ளிகள் கைது செய்யப் பட்டுள்ளனர். — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-ரி)

### பாலியல் வன்முறை

பளை ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று முன்தினம் பாலியல் வன்முறைக்கு உட் படுத்தப்பட்டதாகத் தெரிவிக் கப்படும் பதினேழு வயது இளம் பெண் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றார்.

இச்செயலுக்குக் காரணமான நபர் சம்பந்தப்பட்டோரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

# கேள்வி அறிவித்தல்-1997

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள், சந்தைகள், சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 1997 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 1997 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22-11-1996 முற்பகல் 11.00 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 11.15 மணிக்கு திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் அந்தந்த உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 20 - 11 - 1996 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி, 06-11-1996,

| சந்தைகள், இறைச்சிக் கடைகள் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. மரக்கறிச்சந்தை, நெல்லியடி (தராசு வரி நீங்கலாக) | 150.00 | 5,000.00 | 500,000.00 |
| 02. மீன் சந்தை, நெல்லியடி | 150.00 | 1,000.00 | 36,000.00 |
| 03. கோவிற் சந்தை | 150.00 | 1,000.00 | 25,000.00 |
| 04. கொட்டடிச் சந்தை | 100.00 | 500.00 | 1,500.00 |
| 05. சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 150.00 | 1,000.00 | 36,000.00 |
| 06. ஆட்டிறைச்சிக் கடை இல. 1- நெல்லியடி | 100.00 | 500.00 | 12,000.00 |
| 07. ஆட்டிறைச்சிக் கடை இல. 2- நெல்லியடி | 100.00 | 500.00 | 12,000.00 |
| 08. ஆட்டிறைச்சிக் கடை இல. 3- நெல்லியடி | 100.00 | 500.00 | 12,000.00 |
| 09. மாட்டிறைச்சிக் கடை இல. 2- நெல்லியடி | 150.00 | 3,000.00 | 175,000.00 |
| 10. கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 3,500.00 |
| 11. கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 500.00 | 3,000.00 |
| 12. கோவிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 1,000.00 | 30,000.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 01. உடுப்பிட்டிச் சந்தை | 150.00 | 2,000.00 | 80,000.00 |
| 02. அந்திரான் சந்தை | 150.00 | 500.00 | 4,500.00 |
| 03. நவிண்டில் சந்தை | 100.00 | 500.00 | 4,000.00 |
| 04. உடுப்பிட்டிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 2,000.00 | 65,000.00 |
| 05. உடுப்பிட்டிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 500 00 | 4,000.00 |
| 06. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 500.00 | 18,000.00 |
| 07. உடுப்பிட்டி சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 100.00 | 500.00 | 6,000.00 |
| **சேவை** | | | |
| 01. குப்பை கூழங்களை அகற்ற இரட்டை மாட்டு வண்டில் வாடகைக்கு வழங்கல் | 100.00 | 500.00 | — |
| 02. குப்பை கூழங்களை அகற்ற உழவுயந்திரப் பெட்டி உட்பட வாடகைக்கு வழங்கல் | 150.00 | 500.00 | — |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 01. துன்னாலை வடக்கு சந்தை | 100.00 | 500.00 | 2,000.00 |
| 02. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 500.00 | 3,000.00 |
| 03. [illegible] மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 500.00 | 24,000.00 |

(சி/3479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 120 க்கும் மேற்பட்ட உளவுத்துறை அதிகாரிகள் பாகிஸ்தானில் கைது

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்து அவரினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் பலர் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்: 120 க்கும் மேலான உளவுத்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பெனாஸிர் பூட்டோ தனது பதவி நீக்கத்தை ஆட்சேபித்து வழக்குத் தொடரவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பெனாஸிர் பூட்டோவின் பலம் வாய்ந்த கோட்டையாகக் கருதப்படும் நகரங்களில் படையினர் பெரும் அளவில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அதே சமயம் பாகிஸ்தானில் தற்போது நடைபெறும் சம்பவங்கள் வெறும் உள்நாட்டு விவகாரங்கள் என்றும் பாகிஸ்தான் சம்பவங்கள், குறித்து கருத்துத்தெரிவிக்க எதுவும் இல்லை என்றும் இந்தியப் பிரதமர் தேவ கௌடா தெரிவித்துள்ளார்.

## யெல்ஸினின் உடல் நிலையில் முன்னேற்றம்

மொஸ்கோ, நவ. 8

இருதய அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்ட ரஷ்ய ஜனாதிபதி யெல்ஸினின் உடல் நிலை வேகமாக முன்னேறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ மனையில் பிரதமர் விக்ரர் செர்னமைடினை அவர் சுமார் 15 நிமிடங்கள் சந்தித்துப் பேசினார்.

(இ-10)

## ஸயரில் 12 லட்சம் அகதிகள் பட்டினிச்சாவின் விளிம்பில்

ஸயர் நவ 8

ஸயர் நாட்டில் பட்டினி மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் சுமார் 12 இலட்சம் அகதிகளுக்கு அடிப்படை உதவிகளைச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

உதவிகளை எடுத்துச் சென்ற உதவி நிறுவனங்களை ஸயர் படைகள் தடுத்து நிறுத்தியுள்ளன. பட்டினியால் மக்கள் ஆயிரக்கணக்கில் இறக்கவுள்ளனர் என ஐ. நா. சபை எச்சரித்துள்ளது.

ஸயர் அதிபர் மொபுட்டுவைச் சந்தித்த ஐ நா. பிரதிநிதி, தற்காலிக போர் நிறுத்தத்தின் போது பன்னாட்டுத் துருப்புகளின் கண்காணிப்பில் உணவுப் பொருள்கள் அகதிகளுக்குச் சென்றடைய மொபுட்டு சம்மதித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சுப் படைகளும், ஆபிரிக்கப் பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள படைகளும் ஐ. நா. அமைதிப் படையில் சேர்ந்து கொள்வதை ஸயர் அரசுக்கு எதிரான படைகள். ஆட்சேபிக்கின்றன. (இ-10)

## உலக அரங்கில்

### மீண்டும் காங்கிரஸில்

மாதவராவ் சிந்தியா மீண்டும் காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சரான மாதவராவ் சிந்தியா மத்திய பிரதேசத்திலுள்ள குவாலியூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டதால் அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

## அமைச்சரவை மாற்றமே கிளின்ரனின் முதல் வேலை

வாஷிங்டன், நவ. 8

அமெரிக்க அதிபராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள கிளின்ரனின் முதல் வேலை அவரது அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

கிளின்ரனின் நிர்வாகத்தில் இரண்டு தூண்கள் போல் விளங்கிய வெளியுறவு அமைச்சர் வாரின் கிறிஸ்தோபரும், பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பேரியும் தாம் பதவியிலிருந்து விலகவுள்ளதாக கிளின்ரனிடம் தெரிவித்துள்ளனர். வேறு இரு அமைச்சர்களும் ராஜினாமா செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐ. நா. வின் அமெரிக்கத் தூதர் மடலின் ஒல் பிறைற், முன்னாள் செனட் தலைவர் ஜோர் மிசெல் ஆகிய இருவரில் ஒருவர் வெளியுறவு அமைச்சராகவும், சி. ஐ. ஏ. யின் பணிப்பாளர் ஜோன் டாஸ் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

எதிர்வரும் செவ்வாய் கிழமைக்குள் நிர்வாக மாற்றங்களை மேற்கொண்ட பின்னர் ஓய்வெடுப்பதற்காக கிளின்ரன் ஹவாய் தீவு செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10

## பிரிட்டிஷ் மக்கள் பிரம்படிக்கு ஆதரவு!

லண்டன், நவ. 8

பிரிட்டிஷ் பாடசாலைகளில் பிரம்படியை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கு பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் பாடசாலைகளில் முன்பு பிரம்படி அமுலில் இருந்து வந்தது. எனினும் 1986 ஆம் ஆண்டில் பிரம்படி வழங்கக் கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே பிரம்படிக்குச் சாதகமாக மூன்றில் இரண்டு பகுதி பிரிட்டிஷ் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிரம்படி நிறுத்தப்பட்ட பின்னர் பாடசாலைகளில் ஒழுக்கம் சீர்குலைந்துவிட்டது என்று பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் கருதுகின்றனர். (இ)

## காஷ்மீரை பாகிஸ்தான் பலவந்தமாக இணைக்க அனுமதிக்க போவதில்லை

### ஷேக் அப்துல்லா தெரிவிப்பு

ஸ்ரீநகர், நவ. 8

காஷ்மீரை பலவந்தமாக இணைப்பதற்கு பாகிஸ்தான் மேற்கொள்ளும் முயற்சிகளை அனுமதிக்கப்போவதில்லை.

காஷ்மீர் முதலமைச்சர் ஷேக் அப்துல்லா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காஷ்மீருக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுக்குழுவிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கலை மேலும் விரிவாக்குவதே தமது முதன்மைப் பணியாக இருக்கும் என்று பிரிட்டிஷ் தூதுக் குழுவிடம் அவர் மேலும் தெரிவித்தார்.

1947 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து காஷ்மீரை தன்னுடன் இணைத்துக் கொள்வதற்கு பாகிஸ்தான் முயன்று வருகிறது.

காஷ்மீருக்காக இந்தியாவும் பாகிஸ்தானும் இரு யுத்தங்களை நடத்தி உள்ளன.

(இ)

# எம்.பிக்கள் தம் கட்சிக்கு நெருக்கடி கொடுத்தால் அதுவே பெரும் வெற்றி

## அயர்லாந்து கருத்தரங்கு குறித்து சித்தார்த்தன்

வட அயர்லாந்து பிரச்சினை பற்றி அறிந்துவர இலங்கை நாடாளுமன்றக் குழு ஒன்று அண்மையில் வட அயர்லாந்து சென்றது. அந்தக் குழுவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனும் அங்கம் வகித்தார். தமது பயணம் குறித்து அவர் லண்டனில் பி.பி சிக்கு அளித்த பேட்டியின் விவரம் இங்கு பிரசுரமாகிறது.

வட அயர்லாந்தில் உள்ள கத்தோலிக்க மக்களுடைய பிரச்சினைகள், அவர்களுடைய போராட்டங்கள் சம்பந்தமாக அறிந்து, படித்து—

அந்தப் பிரச்சினைக்கும், எமது பிரச்சினைக்கும் இருக்கக்கூடிய ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து— அவர்களது சமாதான அணுகுமுறைகளை எங்களது பிரச்சினைகள் தொடர்பாகப் பயன்படுத்த முடியுமா என்பதை ஆராய்வதற்காகவே நாம் வட அயர்லாந்து சென்றிருந்தோம்.

அதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக அங்கு நடந்த கருத்தரங்கின் முடிவில் ஒரு பத்திரிகை அறிக்கை விடப்பட்டது.

அதில் 2 விடயங்கள் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஒன்று இலங்கையில் இராணுவத் தீர்வு ஒன்று இருக்க முடியாது: அரசியல் தீர்வு தான் வேண்டும்.

மற்றது ஓர் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக இன்னுமொரு விடயமும் குறிப்பிடப்பட்டிருந்தது ஒரு சர்வதேச நடுநிலையாளர்களைக் கொண்டு இந்த அரசியல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான அறிக்கையில் எமது குழுவில் இடம் பெற்றுள்ள 23 நாடாளுமன்ற உறுபபினர்களும் கையொப்பமிட்டனர்.

முக்கியமாக ஐ. தே. கட்சியையும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதில் கையொப்பமிட்டனர்.

அதிலிருந்து இந்த இரண்டு கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அரசியல் தீர்வு தேவை என்பதை ஒத்துக்கொள்ளும் நிலைமை அங்கிருந்தது.

ஆனால் அவர்கள் இலங்கை திரும்பியவுடன் அதனை மறந்துவிடுவார்களோ என் [illegible] அங்கு சென்ற பின்புதான் நான் அதைப் பார்க்க முடியும்.

இலங்கை சென்ற பின்னர் இது குறித்துப் பேசுவதற்கு எங்களைப் பொறுத்தவரை பெரிதாக ஒன்றுமில்லை.

ஆனால் ஐ. தே. கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கவோ அல்லது அரசாங்கத்துக்கோ ஐ. தே. கட்சிக்கோ அழுத்தம் கொடுக்கவோ முடியுமானால் அது ஒரு பெரிய வெற்றியாகவே அமையும்.

வடபுலத்தில் இளம் பெண்ணும் அவரது உறவினர்களும் காணாமற் போன விடயம் நான் இங்கு வரும் முன்பே அறிவிக்கப்பட்டது. அது மாத்திரமல்ல அதுபோன்ற காணாமற்போன பல சம்பவங்கள் பற்றியும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆரம்ப கட்டமாக நாங்கள் இப்போது அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு வாக்களிக்காமலிருக்கும் ஒரு நிலையை எடுத்துள்ளோம்.

காலப் போக்கில் வடபுலத்தில் அரச படைகளின் நடவடிக்கைகள் மோசமாக போய்க் கொண்டிருந்தால் அரசுக்கு ஆதரவளிக்கின்ற நிலையிலிருந்து நாங்கள் விலக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

### ஜனாதிபதியின் கோரிக்கை

யாழ். குடாநாட்டுக்குச் செல்லும்படி அண்மையில் ஜனாதிபதி எங்களைக் கேட்டிருந்தார்.

அங்கு சென்று சகஜ நிலைமையைக் கொண்டு வருமாறும்—

மக்களுக்கு உதவி புரியுமாறும்— தெரிவித்தார்.

ஆனால் அது தொடர்பாக நாங்கள் இன்னும் சரியான முடிவு எடுக்கவில்லை. ஏனெனில் ஒன்று, இன்று இராணுவத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை எங்களால் தடுக்க முடியுமா?

பொதுமக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இயங்கி மக்களுடைய பாதிப்பை எங்களால் குறைக்க முடியுமா யின் யாழ்ப்பாணம் செல்வது பற்றி நாம் சிந்திக்கலாம்.

ஆனால் அது பற்றி சரியான திடமான நடவடிக்கை இன்று எங்களிடமில்லை. அந்த நம்பிக்கை வராமல் நாங்கள் அங்கு செல்லமாட்டோம். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பேப்பர் கட்டிங் மெசின் Madein Londan உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோக் யோசப், இல. 123, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் (43530)

யன்மார் டீசல் இயந்திரம் கொண்ட 2000 W வலுவுள்ள மின்பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம்: காலை 8.00-11.00 வரை. முகாமையாளர், திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில், மீசாலை. (43520)

நல்ல நிலையில் உள்ள ரயர் வண்டில், Singer குளிர்சாதனப் பெட்டி ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வி. சந்திரமதி 27/20, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (43496)

## திருமணசேவை

எம்மை சகலரும் நாடுவது நம்பகமானசேவையினாலும், பொருத்தமான மணமக்களைப் பெறும் வாய்ப்புக்களினாலுமே. பெற்றோர் நேரில் வரவும். விவாகப் பொருத்தத்துக்கான குறிப்புகள், தகவல்கள் வழங்கும் சேவை. இல: 03, யாழ்வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (43547)

## தேவை

பாவித்த பழைய வாகன பற்றரிகள் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: 403, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்) (43545)

## உடன் விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Red Rose Farm, ந. குணராஜ், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (சி-3473)

---

## G·A·Q 97 (யாழ்ப்பாணம்)

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

**G·A·Q 97 பேராதனை**

ஏப்ரலில் பரீட்சை எடுக்கும் மாணவர்க்கான

மீட்டல் விரிவுரைகள் ஆரம்பம் 11 – 11 – 96 3 மணி

விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

S. அருள்நங்கை

**பிறைற்வே இன்ஸ்ரிரியூட்,**

முத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.

(43539)

---

## திருமகள் கல்வி நிலையம்

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- ★ புலமைப்பரிசில் வகுப்பு, ஆண்டு 5
- ★ புலமைப் பரிசில் ஆயத்த வகுப்பு, ஆண்டு 4
- ★ English - சகல வகுப்புகளுக்கும்
- ★ Spoken English
- ★ பாலர் முன் பள்ளி வகுப்புகள்

யாவும் திறமை மிக்க ஆசிரியரால் 01 - 11 - 1996 தேதி முதல் கற்பிக்கப்படுகிறது. முன்னிடம் பெற உடன் நாடுங்கள்.

(43551)

---

நல்லூர் பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

## 1997 ஆம் ஆண்டு

இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றுக்கான குத்தகை.

கேள்விப்படிவம் வழங்கல் தலைமை அலுவலகம் —
07 - 11 - 96 தொடக்கம் 20 - 11 - 96 ஆம் திகதி பி.ப. 2 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றல் தலைமை அலுவலகம் —
21 - 11 - 96 ஆம் திகதி மு. ப. 10-00 மணி வரை

கேள்விப்படிவம் திறத்தல் தலைமை அலுவலகம் —
21 - 11 - 96 ஆம் திகதி மு. ப. 11-00 மணி வரை

| குத்தகை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம். | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை. |
|---|---|---|---|
| **1) நல்லூர் உப - அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை துவி ச. வ. பாதுகாப்பு நிலையம் | 200/- | 2,500/- | 10,315/- |
| 2. திருநெல்வேலி ஆட்டிறைச்சிக்கடை இல. 1. | 200/- | 3,000/- | 42,625/- |
| 3. திருநெல்வேலி ஆட்டிறைச்சிக்கடை இல. 2. | 200/- | 3,000/- | 42,625/- |
| **2) கொக்குவில் உப - அலுவலகம்** | | | |
| 1. 327, பலாலி வீதி, ஆட்டுடிறைச்சிக்கடை | 200/- | 3,000/- | 20,765/- |
| 2. கோவில் தோட்டம் மா. இ. கடை | 200/- | 3,000/- | 7,015/- |
| 3 கோண்டாவில் குமார் வீதி, மா. இ. கடை | 200/- | 3,000/- | 7,015/- |
| 4. இணுவில் மஞ்சத்தடி மா. இ. கடை | 200/- | 3,000/- | 27,640/- |
| 5. ஆடியபாதம் சந்தை ஆ. இ. கடை | 200/- | 3,000/- | 23,790/- |
| 6. ஆடியபாதம் சந்தை மா. இ. கடை | 200/- | 3,000/- | 27,640/- |
| 7. கொக்குவில் உப-அலுவலக ஆ. இ கடை | 200/- | 3,000/- | 24,890/- |
| 8. கொக்குவில் உப - அலுவலக மா. இ. கடை | 200/- | 3,000/- | 42,625/- |
| 9. கோண்டாவில் ஸ்ரேசனடி மா. இ. கடை | 200/- | 3,000/- | 5,300/- |

கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி கமலா சிவசிதம்பரம்
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேசசபை

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
06 - 11 - 1996

(சி-3475)

---

# அறிவித்தல்

அளவெட்டி மல்லாகம்

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

(மட்டுப்படுத்தப்பட்டது)

## இளைக் குழுத் தேர்தல் 1996

மேற்படி சங்கத்தில் கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் பின்வரும் இடங்களில் கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி 23-11-96 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

| கிளை இல. | ஏற்றுக் கொள்ளப்படும் இடம் |
|---|---|
| 01 | இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி |
| 02 | யாழ். வீதி, மானிப்பாய் |
| 03 | அளவெட்டி தெற்கு, கிளை 07 கட்டடம் |
| 04 | கோண்டாவில் டிப்போ வீதி |
| 05 | இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி |
| 06 | தலைமைக்காரியாலயம், கே. கே. எஸ். றோட், இணுவில் |
| 07 | அளவெட்டி தெற்கு, கிளை 07 கட்டடம் |
| 08 | மல்லாகம், கிளை 08 கட்டடம் |
| 09 | மல்லாகம், கிளை 08 கட்டடம் |
| 10 | மல்லாகம், கிளை 08 கட்டடம் |
| 11 | அளவெட்டி தெற்கு, கலைநகர் கிளை 11 கட்டடம் |
| 12 | மல்லாகம், கிளை 08 கட்டடம். |

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் நேரம் — (இலங்கை நேரப்படி)
காலை 09 மணி முதல் 10 மணி வரை
ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளும் நேரம் --
காலை 10 மணி முதல் 11 மணி வரை

போட்டி ஏற்படும் கிளைகளில் தேர்தல் நடைபெறும் திகதி: **30 - 11 - 1996**
சனிக்கிழமை
நேரம்—காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

நியமனப் பத்திரங்கள் காரியாலயத்திலும், கிளைகளிலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பொ. தெட்சணாமூர்த்தி
தேர்தல் உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்,
வலி - வடக்கு,
தெல்லிப்பளை.
07-11-96

(சி-3478)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் இராசேந்திரம் பிரதீபன்
(தீபன்)

தரணியிலே வந்துதித்த கலைச் செல்வமே! ஆருயிரே!
உன் இளமையை நோய்வந்து தின்றதோ?
நம்ப முடியவில்லையே ஐயா!
மலரவேண்டிய மொட்டே
மலராமல் போனாயோ?
மறையவில்லை ஐயா!
தற்காலிக பிரிவைக் கூட விரும்பாமல்
தனித்தோம் உன் முழுமையான
பிரிவை எப்படித் தாங்கிக் கொள்வோம் ஐயா!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை,
அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா,
சித்தப்பா, சித்திமார், மாமா, அத்தைமார்,
மச்சான், மைத்துனிமார், உற்றார்,
உறவினர்கள்.

அளவெட்டி,
பளை.

(8955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைப் பாதை திறக்கும் முயற்சியில் கடும் எதிர்ப்பு - இழப்பு ஏற்படலாம்!

## கிளிநொச்சி ஒரு பரீட்சார்த்தக் களமே

கொழும்பிலிருந்து வெளியாகும் "தினமுரசு" வார சஞ்சிகையில் "சத்ஜயவும் வன்னிப் போர் முறையும்" என்ற தலைப்பில் "நாரதர்" எழுதிய "எக்ஸ்ரே ரிப்போர்ட்" இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

'சத்ஜய' (உண்மை வெற்றி) மூன்றாம் கட்ட நடவடிக்கை மூலமாக கிளிநொச்சி நகரை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

'சத்ஜய' கட்டம் ஒன்றின் போதே கிளிநொச்சி நகரில் உள்ள மக்கள் வெளியேறி விட்டனர். நகரமும் நரகமாகிவிட்டது.

படைத்தரப்பினர் கூறுவதுபோல கிளிநொச்சி புலிகளின் பிரதான தளமாக இருக்கவில்லை.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் போது புலிகளைப் பொறுத்தவரை கிளிநொச்சி ஒரு பரீட்சார்த்த களமாகவே இருந்தது.

வன்னியின் ஒருபகுதியாக கிளிநொச்சி இருந்தாலும், வன்னியில் புலிகளின் பிரதான தளம் அடர்ந்த காடுகள் சார்ந்த முல்லைத்தீவுக்குள்தான் இருக்கிறது.

ஆனையிறவில் இருந்து வவுனியாவரை படையினர் ஒரு தரைப்பாதையை அமைத்தால்கூட புலிகளின் பிரதான தளப்பகுதிக்கு பாதகம் ஏற்படப்போவதில்லை.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய படையினர் அடுத்ததாக வவுனியாவரையான தரைப்பாதை ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கக் கூடும்.

புலிகளின் கடும் எதிர்ப்பையும், பெரும் இழப்பையும் எதிர்கொண்டே அவ்வாறான ஒரு நடவடிக்கையை படையினர் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

யாழ். குடாநாட்டை கைப்பற்றும் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையில் படைத்தரப்பினருக்கு ஏற்பட்ட இழப்பை விட 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள இழப்பு பாரியதாக இருக்கிறது.

### மாறுபட்ட தரை அமைப்பு

சண்டை நடைபெற்ற தரை அமைப்பும், புலிகளின் உக்கிரமான பதிலடியும் யாழ். குடாநாட்டு போர் முனையில் இருந்து மாறுபட்டிருந்தது.

நீண்ட படைத் தொடர் மீது ஊடறுத்துத் தாக்கும் கரும்புலித் தாக்குதல் ஒன்றையும் புலிகள் மேற்கொண்டிருந்தனர். படைத்தரப்பில் நூறு பேர் வரை அத்தாக்குதலில் பலியானார்கள்.

சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே புலிகளால் ஊடறுத்துத் தாக்க முடிந்திருக்கிறது. இந்நிலையில் படையினர் நிலைகொண்டபின்னர் ஊடறுத்து தாக்குவது புலிகளுக்கு மேலும் சாதகமாக இருக்கும்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களிலும் தமது தரப்பில் 85 புலிகள் பலியானதாக புலிகளின் தலைமைப்பீடம் அறிவித்திருந்தது.

'சத்ஜய' மூன்றாம்கட்ட நடவடிக்கையில் இதுவரை நூறு பேருக்கு உட்பட்ட பெயர் விவரங்களே புலிகள் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினரால் தமது தரப்பு இழப்பு தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவித்ததின்படி 'சத்ஜய' மூன்று கட்டங்களிலும் குறைந்தது 400 படையினர் பலியாகி உள்ளனர். 'சத்ஜய, மூன்றாம் கட்டத்தில் புலிகள் தரப்பில் 700 பேர் பலியானதாக படைத்தரப்பினர் கணக்குச் சொல்லியுள்ளனர். முல்லைத்தீவில் தமது தரப்புக்கு ஏற்பட்ட இழப்பை கிட்டத்தட்ட ஈடுசெய்வது போல இக்கணக்கு காணப்படுகிறது.

புலிகளின் அணிகள் யாழ். குடாநாட்டில் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது பின்வாங்கும் முடிவோடு போரிட்டன.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் போது படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் உத்வேகத்துடன் புலிகளின் அணிகள் போரிட்டன.

'சத்ஜய' மூன்றாம் கட்டத்தில்படைத் தரப்பினர் தமது முழுப்பலத்தையும் பிரயோகித்தனர்.

புலிகளின் அணிகளை முடியுமானளவுக்கு அழித்தொழிக்கவும் படையினர் திட்டமிட்டனர்.

முல்லைத்தீவில் புலிகள் கைப்பற்றிய ஆட்டிலறிப் பீரங்கிகள் கிளிநொச்சிச் சண்டையில் பயன்படுத்தப்பட்டால் கண்டறிந்து அழித்துவிடவும் வான் மூலமான தேடுதல் நடத்தப்பட்டது.

வான் படையின் பாதுகாப்புடனும், தாக்குதலுடனும் தரைப்படைகள் பெருந்தொகையாக நகர்ந்தன.

ஏற்கனவே 'சத்ஜய' நடவடிக்கையின் இரண்டு கட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்து அதற்கேற்ப தமது தாக்குதலை திட்டமிட்டனர் படையினர்.

இந்நிலையில் களநிலைவரம் படையினருக்கு சாதகமானதாக மாறிக்கொண்டிருப்பதைக் கவனித்த புலிகளின் அணிகளுக்கு இரண்டு வழிகள் இருந்தன.

ஒன்று மேலும் புதிய அணிகளை களத்தில் இறக்கிச் சண்டையைத் தொடருவது.

இரண்டு கிளிநொச்சி வரை படையினர் முன்னேற அனுமதித்துவிட்டு பின்னர் தாக்குதல்களைத் தொடுப்பது.

முதல் வழியில் முயன்றால் பாரிய ஆட்பலத்தை இழப்பதாகிவிடும். எனவே இரண்டாவது வழியை தெரிவு செய்தனர் புலிகள்.

29-09-96 அன்று பிற்பகல் தான் கிளிநொச்சி நகரம் படையினரின் கட்டுப்பாட்டில் சென்றது. 28-09-96 அன்றே புலிகளின் அணிகள் சண்டையில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'சத்ஜய' இராணுவ நடவடிக்கை கட்டம் மூன்று இரண்டு வழிகளில் உடனடியான பலன்களை அறுவடை செய்து கொடுத்துள்ளது.

முல்லைத்தீவுச் சமரில் ஏற்பட்ட தோல்வியால் எதிர்க்கட்சியின் கண்டனங்களால் பாதிக்கப்பட்ட தனது 'இமேஜை' காப்பாற்ற ஒரு வாய்ப்பு இது அரசியல் ரீதியான சாதகம்.

விலைவாசி ஏற்றங்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கும் கிளிநொச்சியைக் கைப்பற்றிய செய்தி ஓர் ஆறுதல் பரிசுபோல வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இராணுவ ரீதியான பலன். முல்லைச் சமரின் பின்னர் இராணுவ தரப்புக்கு உற்சாகம் கொடுத்து தொடர்ந்து போரில் ஈடுபடுத்த 'சத்ஜய' வெற்றி உதவும். அத்தோடு வன்னியில் புலிகளை தற்காப்பு நிலையில்வைத்திருந்து அவர்களது தாக்குதல் யுத்த முயற்சிகளை தடுப்பதும் படையினரின் நோக்கம்

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிவிட்டதால், படையினர் தொடர்ந்தும் வன்னியில் நகராமல் தடுப்பதுதான் புலிகளின் முதற் கடமையாக இருக்கும் எனவே புலிகளின் பிரதான கவனமும், பிரதான அணிகளும் வன்னித்தள தற்காப்பில் குவிந்திருக்க வேண்டி ஏற்படலாம்.

அதன் மூலமாக யாழ். குடாநாட்டிலும் கிழக்கிலும் புலிகளின் அணிகளது எண்ணிக்கை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று படைத்தரப்பினர் கணக்குப் போடலாம்.

### பதிலடியின் நோக்கம்

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்காக புலிகள் மேற்கொண்ட பதிலடி நடவடிக்கையின் உண்மையான நோக்கம் கிளிநொச்சி நகரைப் பாதுகாப்பதல்ல.

வன்னியில் படையினர் தமது நடவடிக்கைகளை மேலும் தொடர்வதற்கான நம்பிக்கையையும், உற்சாகத்தையும் பெறாமல் தடுப்பது தான் புலிகளின் நோக்கம்.

கிளிநொச்சி நகரை கைப்பற்றிவிடாமல் தடுப்பது. அது முடியாவிட்டால் பலத்த இழப்புக்களுடன்தான் கைப்பற்ற முடிந்தது என்ற நிலையை ஏற்படுத்துவது என்பதுதான் புலிகளின் எண்ணம்.

தற்போது படைத்தரப்பினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றிவிட்டனர்.

இந்நிலையில் நீண்ட நிலப் பரப்பில் கால் பதித்து நிற்பது ஆபத்தானது என்று படையினர் உணரத்தக்கதாக தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதே புலிகளின் தந்திரமாக இருக்கும்.

ஆனையிறவில் இருந்து பரந்தன் வரை படையினருக்கு பாதுகாப்பான பிரதேசம். பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையான ஆறு கிலோமீட்டர் தூரம்தான் புலிகளின் ஊடறுத்து தாக்கும் நடவடிக்கைகளுக்கு படையினர் முகம் கொடுக்க வேண்டிய பகுதியாகும்.

அது தவிர கிளிநொச்சி நகரில் மக்கள் இல்லாமல் இருப்பதால் புலிகள் மோட்டார் தாக்குதல்களையும் சரமாரியாக தொடருவார்கள்,

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தின் பரப்பளவு கிட்டத்தட்ட 8885 சதுர கிலோமீட்டர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1279 சதுர கிலோமீட்டர். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஒரு சிறு பகுதிதான் தற்போது படையினர் வசம் சென்றுள்ளது.

எனவே வன்னிப் போர் முனைநிலைவரத்தை 'சத்ஜய' நடவடிக்கையின் வெற்றியை வைத்து மட்டும் கணிப்பிட முடியாது.

★

# லண்டனிலுள்ள தமிழ் டாக்டர்களில் ஒருவராவது யாழ்.வர விரும்பவில்லை!

## பிரிட்டிஷ் தூதுவர் வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், நவ. 8

லண்டனில் பணியாற்றும் இலங்கைத் தமிழ் டாக்டர்களை சம்பளத்துடனான விடுமுறையில் யாழ்ப்பாணம் சென்று குறுகிய காலமாவது அங்கு சேவை செய்யுமாறு கோரினோம். ஆனால் ஒரு டாக்டராவது அதனை ஏற்க முன்வரவில்லை.

மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார் பிரிட்டிஷ் தூதுவர் ராட்ஹாம்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிட்டிஷ் தூதுவரிடம் பிரிட்டனில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு டாக்டர்களை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கோரிக்கை விடுத்திருந்தார்.

அக்கோரிக்கைக்குப் பதில் அளிக்கையிலேயே பிரிட்டிஷ் தூதுவர் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தியாகும் டாக்டர்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு டாக்டர்களை அனுப்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து லண்டனில் பணியாற்றும் தமிழ் டாக்டர்களை அணுகினோம்.

"சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குகிறோம். நீங்கள் போய் உங்கள் தாய் நாட்டில் ஆறு மாதமோ அல்லது ஒரு வருடமோ சேவையாற்றுங்கள்" என்று கேட்டோம். ஒருவர் கூட இங்கு வந்து பணியாற்ற முன்வரவில்லை.

விரைவில் பிரிட்டிஷ் டாக்டர்களை இங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறோம்.

இப்படி பிரிட்டிஷ் தூதுவர் மேலும் தெரிவித்திருந்தார். (இ-3)

## தீபாவளியன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம் நவ. 8

மக்கள் துன்பம் நீங்கிவாழவும், உலகம் உய்யவும் வேண்டி தீபாவளி தினத்தன்று உலக சேம பக்திப் பிரார்த்தனை நடத்தப்பட உள்ளது.

இந்து சமயப் பேரவையின் ஆதரவில் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் எழுந்தருளி இருக்கும் சிதம்பரேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை மேற்படி உலக சேம பக்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்தப் பிரார்த்தனையில் நல்லை ஆதீன முதல்வர் உட்பட சமயப் பெரியார்கள் பலரும் கலந்து கொள்வர். (அ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 8

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா [illegible] 9.30 மணிக்கு (பழைய நேரம்) நடைபெறும். (இ-4)

# இலங்கை விமானப்படைக்கு இலக்கு தவறாத குண்டுகள்

## இஸ்ரேல் வழங்கியதாகத் தகவல்

கொழும்பு, நவ. 8

இஸ்ரேலினால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட இலக்குத் தவறாதுதாக்கும்குண்டுகளை இலங்கை விமானப் படை பெற்றிருப்பதாக, 'இந்து' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. புலிகள் இயக்கத் தலைவர் வழமையாக இரகசிய இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளும் போது பயன்படுத்தும் வாகனஅணியைக் குறிவைக்கவே "ஸ்மார்ட் பொம்ஸ்" என அழைக்கப்படும் இக்குண்டுகள் பெறப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் பலஸ்தீன தீவிரவாத முக்கிய தலைவர் ஒருவர் வாகன அணியில் செல்லும் பொழுது அவரைக் கொல்ல இதே குண்டுகளையே இஸ்ரேல் பயன்படுத்தியது.

இந்த குண்டுகள் பற்றிய தகவல்களுக்கு மத்தியிலேயே முல்லைத்தீவு பகுதி காடுகளில் உள்ள புலிகளின் தலைவரின் மறைவிடங்கள் மீது இராணுவ ஹெலிக்கொப்டர்கள் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவுக்கு தென்மேற்கே நெடுங்கேணி காடுகளில் அமைந்துள்ள இந்த மறைவிடங்கள் மீதான தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்கள் குறித்துத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன என்று இந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150)

## சித்த ஆயுர்வேத விரிவுரைகள்

யாழ்ப்பாணம், நவ. 8

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியின் புதிய ஆண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமகும் என்றும் —

புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் 1997 ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் கல்லூரி அதிபர் டாக்டர் நா. வாமதேவன் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு

## கந்தசுவாமி கோயில்
## (பேச்சி அம்மன்)
## புதிய சூரன் வெள்ளோட்டமும் ஆச்சாரியார் பாராட்டு விழாவும்

காலம்: **8 – II – 1996** வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 9-00 மணிக்கு புதிய சூரன் வெள்ளோட்டமும், மாலை 2-00 மணிக்கு பாராட்டு வைபவமும் நடைபெறும்.

மேற்படி விழா பாலகுருமணி பரராசசேகரக் குருக்கள் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

விழாவில் அடியார்கள், அன்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி.

இந்து மன்றமும்,
பரிபாலன சபையும்.

(43552)

---

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### பதில் பொது முகாமையாளர்
(தற்காலிகம்)

மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிக்கமைய சம்பளம் வழங்கப்படும். வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 25 – 11 – 96 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம் இணுவில்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்,
இணுவில்.

(சி-3477)

---

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் இராசையா தர்மராஜ்
(அப்பர்)

தோற்றம்: **26 - 11 - 1943**
மறைவு: **14 - 05 - 1996**

அன்பால் பண்பால் அறிவால்
எம்மை வழி நடத்தி
எம் வாழ்வில் ஒளியூட்டிய அன்புத் தெய்வமே!
மண்ணகம் துறந்து நீர்
வானுலகம் ஏகிவிட்டீர்.
நீறாக நினைந்து நாம்
ஆறாகக் கண்ணீர் வடிக்கின்றோம்.
உடன் பிறப்பே ஆறுமாதங்களென்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

இன்று (8 - 11 - 1996) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
அன்புச் சகோதரர்கள் (இயர்)

சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (8960)

---

# புராணபடன பாரம்பரியம் பேண இளைஞர்களைப் பயிற்ற வேண்டும்

## ஆதீன முதல்வர் வலியுறுத்து

கொழும்புத்துறை, நவ 8

இளம் சந்ததியினரை வருங் காலத்தில் புராணபடனம் வாசிக்க, பயன் சொல்லப் பழக்குவது இன்றைய கால கட்டத்தில் மிக அத்தியாவசியமாகும். இளைஞர்களுக்குப் புராணபடனம் வாசிக்க, பயன் சொல்லப் பயிற்றுவிக்க அந்தந்தப் பகுதி ஆலய நிர்வாகங்கள் முன் வந்து இப்பணியைச் செய்ய வேண்டும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அண்மையில் மூத்த பௌராணிகர்கள் 39 பேர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

ஆதீன முதல்வர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

தற்போது புராணபடனம் செய்வதில் முதியவர்களே தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கின்றனர்.

அதனால் புராண படனம் செய்வது முதியவர்களுக்கு, இளைப்பாறியவர்களுக்கும் உரிய ஒன்று எனச் சிலர் கருதுகிறார்கள். இந்த எண்ணம் மாற்றப்பட வேண்டும்.

ஆன்மீக நாட்டம் கொண்ட இளைஞர்களை இனங்கண்டு இத்துறையில் பயிற்றுவிக்க வேண்டும். அப்போது தான் எமது மண்ணுக்கே சிறப்புத் தரும் புராண படன பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேண ஏதுவாகும்.

ஆலய நிர்வாகங்களுக்கும், சைவ நிறுவனங்களுக்கும் இது விடயத்தில் அதிக பங்கும் பொறுப்பும் உண்டு — என்றார்.

இந்து கலாசாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரும், உதவி அரசாங்க அதிபருமான ஆ. மகாலிங்கம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

நாம் அனைவரும் சமய நெறியில் வாழ்க்கை நடத்தப் பழக வேண்டும். புனிதமான நோக்குடன் தொண்டு செய்ய எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இளம் சந்ததியினராகிய மாணவர் சமுதாயம் சிறுவயதிலிருந்தே சமய, சமூக சேவைகளையும் ஏனைய தொண்டுகளையும் செய்யப் பழகப் வேண்டும்.

சமய உண்மைக் கோட்பாடுகளை மாணவர் மத்தியில் உணர வைக்க அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்துச் செயற்படவும், எமது சமயப் பெரியார்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் இளம் சமுதாயத்தினர் வாழ பழகுவதும் அவசியமாகும் - என்றார்.

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம், ஏழாலை பண்டிதர் கந்தையா ஆகியோர் புராண படனத்தின் சிறப்புகளை எடுத்துக்காட்டி உரை நிகழ்த்தினர். (அ-30)

## சிவதீட்சை

கோண்டாவில் நவ. 8

ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையான எதிர் வரும் 15 ஆம் திகதியன்று சைவ பரிபாலன சபையின் ஆதரவில் சிவதீட்சை நடத்தப்படும்.

நீராவியடி கல்லூரி வீதியில் உள்ள நாவலர் ஆச்சிரமத்தில் அன்று காலை தொடக்கம் சிவதீட்சை வழங்கப்படும். இதுவரை சிவதீட்சை பெறாதவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சைவ பரிபாலன சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-71)

## ஒக்ரோபர் ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், நவ, 8

யாழ்ப்பாணம், நல்லூர். சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் தவிர்ந்த ஏனைய ஓய்வூதியர்களுக்கான ஒக்ரோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று முன்தினம் அனுப்பப்பட்டன.

அதேவேளை— மேற்படி நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் நவம்பர் மாதத்துக்கான ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-3)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: **05—03—1949**

உதிர்வு: **23—10—1992**

அமரர்

### வைரமுத்து இலக்மனேஸ்வரன்
(பவா)

(உரிமையாளர் முருகன் கமக்களஞ்சியம்)

எங்கள் குடும்ப வானில் உதயமாகி அணையாத தீபமாய் எரிந்த ஆருயிர்த் தெய்வமே! பாசமிகு பவாவே கறைபடா வாழ்வு கண்டு மகிழ்ந்தோம்; மறைவினால் நாங்கள் மனமுடைந்தோமே!

ஓம் சாந்தி!

அன்புத்தாய், சகோதரர், மைத்துனர்,
மைத்துனிகள், மருமக்கள்.

கைதடி மேற்கு,
கைதடி. (8961)

---

## ஓராண்டு நினைவலைகள்

மண்ணக மலர்வு: **30 — 01 — 1927**



விண்ணக மறைவு: **22 — 10 — 1996**

உடுவில்

### வைத்திலிங்கம் நடராசா A.V.N.
(ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

திதி:- **08 - 11 - 1996**

அன்பைப் பொழிந்து அறிவையூட்டி
எம்மைக் காத்தாய்.
எங்கள் அன்புத் தெய்வமே! அப்பாவே!
மாறாது உங்கள் பாசம்.
ஆண்டு ஒன்று சென்றிடினும்
எங்கள் நெஞ்சங்கள் என்றும் ஆறாது.

உம் நினைவில் வாழும்;

அன்பு மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

தகவல்:
திருமதி சுசீலா இராமநாதன்
தாதிய உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம். (8957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# மடுவுக்கு மருந்து எடுத்துச்செல்ல இருந்த தடை தளர்த்தப்பட்டது

திருகோணமலை, நவ. 8

மடுப்பகுதிக்கு மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தளர்த்துவது என அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் விசேட மருத்துவக்குழு, பிரெஞ்சு மருத்துவத் தொண்டர் நிறுவனமான எம். எஸ். எவ்வுக்கு அறிவித்திருக்கின்றது.

மடுவில் மூன்று வெளிநாட்டு டாக்டர்கள் மற்றும் இருபது உள்ளூர் பணியாளர்கள் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சேவையைத் தொடர்வதற்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பட்டியலை பாதுகாப்பு அமைச்சின் விசேட மருத்துவக் குழுவிடம் எம். எஸ். எவ். சமர்ப்பித்திருந்தது.

இந்தப்பட்டியலில் உள்ள பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக எம். எஸ். எவ்வுக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்சிசன் சிலிண்டர் உட்பட முக்கிய மருந்துப்பொருள்களை இந்த அனுமதியின் கீழ் எம். எஸ். எவ். அமைப்பு மடுவுக்கு எடுத்துச் செல்லும்.

மடுவுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை எம். எஸ் எவ். கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் மருத்துவக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் மருத்துவக் குழு அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர்—வவுனியா அரச அதிபர் ஊடாக—மடுவுக்குச் செல்லும் வாகன அணி மூலம்—அங்கு அனுப்பி வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

மடுவுக்கு மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளபோதிலும் -

எம். எஸ். எவ்வின் மருத்துவ சேவை இடம்பெறும் மல்லாவி, அக்கராயன் ஆஸ்பத்திரிகளுக்கு இவற்றை எடுத்துச் செல்வதற்கான தடை தொடர்ந்து நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

[உ-150]

## தீவுப்பகுதியிலும் விரைவில் குழந்தைகள் கிளினிக்

தீவுப் பகுதிகளில் 1990ஆம் ஆண்டில் இருந்து இயங்காதிருந்த குழந்தைகளுக்கான வைத்தியக் கிளினிக் மீண்டும் இயங்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இதற்கான முதல் நடவடிக்கையாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு, மண்எண்ணெயில் இயங்கக்கூடிய குளிரூட்டி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கிளினிக்குக்குத் தேவையான மருந்து வகைகளைப் பாதுகாக்க இது உதவும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## மருந்துத் தட்டுப்பாடு

குடாநாட்டில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற காய்ச்சல் வகைகள் தீவிரமாகப் பரவி வருவதாக வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

யாழ். மாவட்டத்தின் பிரதான ஆஸ்பத்திரியான போதனா வைத்திய சாலைப் புள்ளி விவரங்களின்படி, காய்ச்சலால் சிறுவர்களும், குழந்தைகளுமே அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களே மரணம் அடைந்தும் உள்ளனர்.

இந்தநிலை மிகவும் கவலைக்குரியதாகும். காய்ச்சலால் நோயாளர்கள் மீண்டும் மீண்டும் பாதிக்கப் படுவதாகவும் மரணங்களுக்கு அதுவும் ஒரு காரணம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காய்ச்சல் நோயை முற்றாக மாற்ற முடியாததாலேயே, அதற்கேற்ப சிகிச்சை இல்லாததாலேயே அது திரும்பத் திரும்ப ஒருவருக்கு வருகிறது எனக் கொள்ளலாம். உகந்த சிகிச்சை அளிப்பதற்கு வேண்டிய மருந்துகள் குடாநாட்டில் இல்லை என்பதும் இதிலிருந்து வெளிப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஒரு நீங்காப் பிணியாகவே தொடர்கிறது. 1990 ஆம் ஆண்டில் தொட்ட இந்த வியாதி இன்னும் குணமானதாக இல்லை.

அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு; வெளிச்சந்தையிலும் யானை விலை குதிரை விலை; என்ற பலவீனமே தொடர்கிறது. அந்தப் பலவீனமே நோய் பரவுவதற்கும், சாவுகளுக்கும் காரணமாக உள்ளது. பலவீனமான ஒருவனை நோய் இலகுவில் தொற்றிக் கொள்ளும் என்பது வைத்திய விதி. அதேபோல மருந்தின்மை என்ற பலமின்மை குடாநாட்டில் மக்களை நோய்க்குள்ளாக்குகிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு, இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் நேற்று முன்தினமே வந்து சேர்ந்தன.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவும் தண்ணீரும் எந்தளவுக்கு அத்தியாவசியமோ, மருந்தும் அந்தளவுக்கு அவசியம். எனவே உணவுப் பொருள்களைத் தருவிப்பதில் காட்டப்படும் அக்கறை, மருந்தைக் கொண்டு வருவதிலும் இருக்க வேண்டும்

வெளிச் சந்தைக்கு, தனியார் துறைக்கு மருந்து வகைகள் முன்னர் வந்து சேர்ந்ததாகக் கூறப்பட்ட போதிலும் அங்கும் தட்டுப்பாடு. அதன் மூலமாக அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே மருந்து வகைகள் தாராளமாகவும், நியாய விலையிலும் கிடைக்க உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதில் சம்பந்தமுள்ள அரச அதிகாரிகள், வைத்தியசாலை அதிகாரிகள், சுகாதார அமைச்சு அதிகாரிகள் என்று எல்லாத் தரப்பினரும் மருந்து விவகாரத்தை, உயிர்காக்கும் தர்மமாகக் கருதி மனித நேயத்துடன் செயலாற்ற வேண்டும். ஒரு தரப்பினர் மீது மறு தரப்பினர் குற்றஞ் சாட்டியோ, பிழை கண்டு பிடித்தோ தாமதத்தை ஏற்படுதக்கூடாது.

மருந்து அனுப்பும், தருவிக்கும் விடயம் காரணம் கூறி தட்டிக் கழிக்கக் கூடிய ஒன்றல்ல; அது மனித உயிர்களோடு விளையாடுவதற்கு ஒப்பானது.

## பிறந்த நாளும் பிறவா நாளும்

தாய் வயிற்றிலிருந்து மண்ணுலகில் பிறந்த நாள் ஆண்டிற்கு ஒருமுறை வந்து போவது அது உடற் பிறப்பு. பிறந்த நாள் என்று அது விமரிசையாகக் கொண்டாடப் படுவதும் உண்டு.

உடலினால் பெறுவது உணர்வு. வாழ்வு உணர்வுக்குள் அடங்குவது. உடலினால் பெறப்படும் இன்ப துன்பங்கள் அனைத்தும் உணர்வு மயமானவை. அந்த உணர்வு நிலையானது அல்ல. தன் மேல் விழும் துளிமழையை மண் உறிஞ்சி விடுவது போல, இன்ப துன்பமாக வந்து கொண்டிருக்கும் உணர்ச்சிகளை நரம்பு மண்டலங்கள் உணர்வுகளாக்கிச் சீரணித்துக் கொண்டேஇருக்கின்றன. அதனால் மனத்தைப் பாதிக்கின்ற விருப்பு வெறுப்பான ஓர் உணர்வு நெடுநேரம் நீடித்திருப்பதில்லை. அது பசிக்கு உண்பதும், மீண்டும் பசிக்கப் புசித்துக் கொண்டிருப்பதும் போலாகும்.

உணர்வுகள் பஞ்ச புலன்கள் மூளை வழியாக ஊஞ்சல் போல வரத்துப் போக்கு வண்ணமாக நிகழ்பவை அவை.

நாம் பெற்ற இன்ப, துன்ப உணர்வு அலைகள், பிற சிந்தனையினாலும் மற்றவரோடு கலந்து உரையாடுவதினாலும், உறக்கத்தினாலும் மறந்து போய்விடும். நித்திரையிலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது புதிதாக நிகழும் இன்ப துன்ப உணர்வு அலைகளை ஏற்கத் தயாராகின்றன. அதனால் உறக்கத்திலிருந்து விழித்து எழுவது பிறப்புக்கு ஒப்பாகும் என்றார் வள்ளுவனார்.

''உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு''

எண்ணங்களினாலும், இன்ப துன்ப உணர்வுகளினாலும் ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு கணமும் அல்லது ஒவ்வொரு எண்ண மாற்றங்களினாலும் நாம் நாளும் உணர்வுகளால் பிறந்தவர்களாவோம்.

நாள் தோறும் ஏற்படும் உணர்வுகளினால் அன்றாடம் நாம் இறைவனுக்கு ஆற்றிய பூசை, வழிபாடு, பிரார்த்தனை அனைத்தும் அன்றன்றே தேய்ந்து போய்விடும்

அதனால் நாளும் நம் பெருமானைப் பாடிப் பரவ வேண்டும். அப்படிப் பாடிப் பரவிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள் ஆகும் என்பது சமய குரவராகிய சிவதொண்டரான திருநாவுக்கரசுப் பெருமானுடைய ஞான வாக்கு.

நாள் தோறும் அன்றலர்ந்த மலர் போல மனமும் உள்ளமும் மலர, நரம்பு மண்டலங்களில் முறுக்கு ஏற்பட்டு நோய்க்கு ஆளாகாமல் பிறந்தோர் அடையும் பெரும் பேற்றினை எய்துவதற்கு, அப்பரடிகள் நமக்கு அருள் நெறி ஒன்றைச் சொல்லித் தந்துள்ளார்.

அருளானை, வேதத்துக்கு அப்பால் நின்ற பொருளானை வாயாரப் புகழ்ந்து பாட வேண்டும். அந்த அருள்நெறி

### ஞானக்கதிர்

யில் நடப்போமானால் பிறவாதநாளும்பிறந்தநாளாகும். பிறந்த நாளைக் கொண்டாடியும் பெரியானைப் பேசவில்லையானால் அதுவும் உணர்வு பூர்வமாகப் பிறவாத நாளேயாகும்.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்று அறிதற்கரிய அந்த நிலை எய்தப் பெற்ற அனுபவமாக அப்பர் வாக்கில் வரும் அருந்தொடர்களில் சில இவை:

★ பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

★ அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப்பொழுதும்மறந் துய்வனோ.

★ சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்...

★எப்போதும் இனியானை என் மனைத் தேவத்தேனே...

—சிவ. சண்முகவடிவேல்

### நாளை

ஐப்பசி 24

சனிக்கிழமை

திதி: திரயோதசி

முற்பகல் 10.29 வரை.

நட்சத்திரம்: சித்திரை

பிற்பகல் 12.40 வரை.

மரணயோகம்

ராகுகாலம்: 9.05-10.35

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## விளக்கமறியல் நீடிப்பு

கிருஷாந்தி மற்றும் மூவர் நாவற்குழியில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் கைதான ஒன்பது இராணுவத்தினர் மற்றும் இரண்டு பொலீஸாரை இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக் கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் முனிதாஸ நாணயக்கார திங்களன்று உத்தரவிட்டார்.

புலன் விசாரணைகள் தொடர்வதாகத் தெரிவித்த பொலீஸாரிடம் தவணைத் தினமான 18 ஆம் திகதி மேலதிக அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-3)

## பெண்கள் ஆர்ப்பாட்டம்

நாவற்குழிப் பகுதியில் பாடசாலை மாணவி கிருஷாந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு நீதி வேண்டி சுமார் இருநூறு பெண்கள் கொழும்பு நகர மண்டபத்துக்கு முன்பாக கடந்த திங்களன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமைதி, சமாதானம் விரும்பும் மகளிரே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-150)

## 521 பயணிகள் வந்தனர்

நேற்று முன்தினம் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வந்த 3 கப்பல்களிலும் 521 பயணிகள் வந்து சேர்ந்தனர்.

அவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோரும் அடங்குவர். இங்கிருந்து 523 பயணிகள் பயணமானார்கள். (உ-3)

## வன்னிக் காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு!

திருகோணமலை, நவ. 8

யாழ். குடாநாட்டிலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்களும், கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையை அடுத்து அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்களும் வன்னிக் காட்டுப் புறங்களில் குடியேறியதை அடுத்து —

வன்னிக்காட்டுப் பகுதிகளில் திரியும் காட்டு யானைகள் அங்கிருந்து இடம் பெயர்ந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நடமாடத் தொடங்கியிருப்பதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பகுதிகளிலேயே தாராளமாக யானைகள் நடமாடுகின்றன.

கிளிநொச்சிக்கும் பூநகரிக்கும் இடையில் அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் கடந்த ஞாயிறன்று மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காட்டு யானைகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

(உ - 150)

## ஞாயிறு தினங்களில் கடைகள்

நோய்க்கு விடுமுறை தினமென்று ஒன்று இல்லை. ஞாயிறு தினங்களிலும் நோயாளிக்குரிய மருந்து வாங்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால் பருத்தித்துறைப் பகுதியில் ஞாயிறு தினங்களில் மருந்துக் கடைகள், வர்த்தக சங்கத்திற்கு ஆதரவாக மூடப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் இக்காலகட்டத்தில், வியாபாரிகள் இவ்வாறு நடந்து கொள்வது நியாயமா? சம்பந்தப்பட்டவர்கள் கடை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

வாழ்க்கைச் சுமையால் அல்லலுறும் இன்றைய நிலையில், எத்தனையோ குடும்பங்கள் தாங்கள் நாளாந்தம் வேலை செய்து கிடைக்கும் பணத்திலேயே தங்களது நாளாந்த உணவைத் தயாரித்து உண்ணுகின்றனர். இவ்வாறிருக்கையில், புலோலி வர்த்தக சங்கக் கட்டுப்பாட்டிற்கமைய தனியார் வர்த்தகர்கள் தங்களது கடைகளை ஞாயிறு தினங்களில் திறப்பதில்லை. நுகர்ச்சி வியாபாரத்தைப் பொறுத்த வரையில் அவர்களது நிலைப்பாடு சரியானது.

### வாசகர் திருமுகம்

ஆனால் அன்றைய தினம் ஏழை மக்கள் தங்களுக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருள்களை வாங்குவதற்கு, வசதியாக, புலோலி பல. நோ. கூ. சங்கம் ஞாயிறு தினங்களிலும் தனது கிளைகளில் சிலவற்றை திறப்பதற்கு மூன்பு ஒழுங்கு செய்திருந்தது. அது மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் அண்மையில் இக்கிளைகளும் ஞாயிறு தினங்களில் மூடப்படுவதால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் சம்பந்தப்பட்டவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ப. நோ. கூ. சங்கக் கிளையை திறக்க நடவடிக்கை மேற்கொள்வார்களா?

அ. ம. செபஸ்ரியன்

புலோலி கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கு மருந்து அனுப்ப அவசர வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், நவ. 8

வன்னி மாவட்டத்தில் மலேரியா, வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதால் போதிய மருந்து வகைகளை அங்கு அனுப்புமாறு அவசர கோரிக்கை ஒன்றை சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் அரசிடம் விடுத்துள்ளன.

வன்னி மாவட்டத்தில் செயற்படும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களான செஞ்சிலுவை சர்வதேசக் குழு, எம்.எஸ்.எவ்., ஒக்ஸ்பாம் ஆகிய அமைப்புக்களே இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

நோய்கள் தீவிரமாகப் பரவுவதுடன் போசாக்கின்மை மற்றும் சுகாதாரச் சீர்கேடு பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும் அந்த அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பகுதியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடமாடும் வைத்திய சேவைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதேவேளை—

கடந்த இரு வாரகாலத்தில் அக்சராயன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஐந்து சிறுவர்கள் உட்பட ஏழு பேர் செப்ரிசீமியாவால் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3)

## ஆந்திரத்தில் 25J பேர் பலி

புதுடில்லி, நவ. 8

ஆந்திரப் பிரதேசத்தில் வீசிய கடும் புயல் காற்றினால் 250 பேர் வரை இறந்துள்ளனர்.

உதவி மீட்புப் பணிக்கு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. [உ-3]

## வவுனியாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

படையினர் பீரங்கி, மோட்டார் மற்றும் ஆர்.பி.ஜி. றொக்கட்டுக்களைப் பயன்படுத்தித் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ லெப்டினன்ட் ஒருவரும், சார்ஜன்ட் ஒருவரும் இம் மோதலில் கொல்லப்பட்டனர்.

காயமடைந்த ஆறு படைச் சிப்பாய்கள் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (உ-3)


உ

## வாழ்த்துகின்றோம்

மணி விழாக் கண்ட மதிப்பிற்குரிய
எங்கள் ஆலயக் குருக்கள் ஐயா,
''கிரியா கலாப முக்தாமணி''

### சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள் சீதாலக்ஷ்மி அம்மா தம்பதிகள்



தாது வருடம் ஐப்பசித் திங்கள் 17 ஆம் நாள் (02-11-96) அன்று தங்கள் மணிவிழாவினை (ஷஷ்டியப்த பூர்த்தி விழா) வெகு விமரிசையாகக் கொண்டாடியதை முன்னிட்டு, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர், நிர்வாக அலுவலர்கள், உறுப்பினர்கள் ஆகிய நாங்கள், பல்லாண்டு வாழ்க! வாழ்க! என மகிழ்வுடன், உளமார வாழ்த்தி வணங்குகின்றோம்.

தர்மகர்த்தா சபை
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் ஆலயம்.

சுதுமலை,
மானிப்பாய். (8959)


**மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்**

# சமய சந்நிதிகளில்

புலோலி இளவெல்லை கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை சுமார் 10 மணியளவில் நடைபெறுகிறது. (அ- 30)

★ ★ ★

நுணாவில் கிழக்கு கந்தசுவாமி கோயில் (பேச்சி அம்மன் கோயில்) புதிய சூரன் வெள்ளோட்டம் இன்று மு.ப. 9 மணிக்கு நடைபெறும்.

அதன் பின்னர் பி.ப. 2 மணிக்கு ஆச்சாரியாரைப் பாராட்டும் விழாவும் இடம் பெறும் (அ)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை பணிமனையில் இன்று காலை 8 மணி தொடக்கம் சிவதீட்சை வழங்கப்படும்

★ ★ ★

நல்லூர் சிவன் கோயிலில் இன்று பி.ப. 3 மணி முதல் பிரதோச விசேட அபிஷேகம், பூசை நடைபெறும். (அ-30)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வில் —

இன்று மு.ப. 10 மணிக்கு சமயப்பேருரை நடைபெறும். 'சிவஞான உபதேசிகன்' என்னும் பொருளில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (அ-173)

## மூவர் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ. 8

கிளிநொச்சியில் படையினரிடம் சிக்கியதாகக் கூறப்படும் மூவர் நேற்று யாழ் செயலகத்தில் படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புகுந்து மாங்காய் பிடுங்கிக் கொண்டிருந்த சமயமே இந்த மூவரும் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

கிளிநொச்சிக்கு இவர்களை மீண்டும் அனுப்பி வைக்கும் நோக்குடன் இவர்கள் செயலக பாதுகாப்பில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். (உ-3)

## பாகிஸ்தானுடன் ஸ்ரீலங்கா இன்று மோதும்

ஷார்ஜாவில் ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், நியூஸிலாந்து ஆகிய அணிகள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இன்றைய ஆட்டத்தில் ஸ்ரீலங்கா பாகிஸ்தான் அணிகள் மோதும்.

நேற்று ஸ்ரீலங்கா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் நியூஸிலாந்து அணி 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றது முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 206 ஓட்டங்களைப் பெற்றது பதிலளித்து ஆடிய ஸ்ரீலங்கா அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 177 ஓட்டங்களையே பெற்றது. [உ-10]

## கிளினிக் நாள்கள்

யாழ் போதனா வைத்தியசாலையில் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதை அடுத்து கிளினிக் நாள் வாரத்திலே ஐந்துநாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைவாரத்தில் மூன்று நாள்களே கிளினிக்குகள் இயங்கிவந்தன.

செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் நீரிழிவு நோய் தவிர்ந்த ஏனைய சகல வைத்தியநோய்களுக்கான கிளினிக்குகளும் — [illegible] களில் நீரிழிவு நோய்க்கான கிளினிக்குகளும் நடைபெறும்.

# கிழக்கில் 2 மாதங்கள் அஹிம்சைப் போர்!

தமிழ் அமைப்புக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் அடுத்த ஜனவரி முதலாம் திகதி வரை சமாதான அஹிம்சைப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக சுதந்திர மாணவர் முன்னணி என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்பு நகரப் பகுதி உயர் வகுப்பு மாணவர்கள் விநியோகித்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு :-

★ நவம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் தமிழ் இயக்கங்களை ஒற்றுமைப் படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னின்று இதனைச் செய்ய வேண்டும். ஏனைய அமைப்புக்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

★ ஆயுதங்கள் தாங்கிப் போராடும் தமிழ்க் குழுவினர் பயங்கரவாதிகள் அல்லர்; 'விடுதலைப் போராளிகள்' என சர்வதேச சமூகமும் பிரகடனப் படுத்தக் கூடியதான முன்முயற்சிகளை இக்காலப் பகுதியில் எடுக்கவேண்டும்.

★ இக்காலப் பகுதியின் முடிவில் தமிழ்க் கட்சிகள், போராளிக் குழுக்கள், முஸ்லிம் அமைப்புகள் ஆகியன ஒன்று சேர்ந்து ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் தமது பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலையை உருவாக்க முடியாவிட்டால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தமிழ் அரசியல் கட்சிகள் மூலம் அரசியலில் பதவி வகிப்போர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும்.

—இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து செஞ்சிலுவைக் கப்பல் மூலம்!

யாழ். வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். வைத்தியசாலையில் ஏற்பட்ட மருந்துத் தட்டுப்பாடு குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து—

பிரதி புதன்கிழமை தோறும் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடத்தும் கப்பல் சேவையில் மருந்து வகைகளை எடுத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து முதன் முதலாக நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த அந்த அமைப்பின் கப்பலில் 5 மெற்றிக் தொன் மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டன. அடுத்த வாரம் வரும் கப்பலிலும் மருந்து எடுத்து வரப்படும். (உ-3)

## பொருளாதாரம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாடலாம்; அங்கும் வியாபாரம் இல்லை. நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் என்னுடன் புறக்கோட்டைக்கு வந்தால் இந் நாட்டின் வணிகத் துறைக்கு ஏற்பட்டுள்ள தலைவிதியை நான் அவருக்கு காட்டத் தயார்!'' — இவ்வாறு றொனி டி மெல் நேற்றுத் தெரிவித்தார். (உ-10)

## நடாநாடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்காக புலிகள் திட்டமிடுகின்றனர் போலும். இதற்காக படையினர் நிலைகொண்டிராத வலிகாமம் பகுதியில் சில பிரதேசங்களில் புலிகள் திரண்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களைச் சிதறடிப்பதற்காகவே தற்போது அப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது'' — என்று கூறினார் உயரதிகாரி ஒருவர்.

எப்படி என்றாலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளுக்குள் சுமார் நூறு விடுதலைப் புலிகள் வரை ஊடுருவியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-150)

## விசாரணைக்கு பயந்து தற்கொலை

யாழ்ப்பாணம், நவ. 8

இராணுவத்தினரின் விசாரணைக்குப் பயந்து நச்சு விதையை உட்கொண்டதாகக் கூறப்படும் ஒருவர் மரணமானார்.

மானிப்பாயில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் மானிப்பாய் பட்டின சபை ஒழுங்கையைச் சேர்ந்த கே. துரைராசா (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

இராணுவம் விசாரணைக்காக அழைத்ததை அடுத்து விசாரணைக்குச் செல்லப் பயந்தே அவர் நச்சு விதையை உட்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய வேளையே அவர் அங்கு மரணமானார். மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

## சிம்பாப்வே உச்சி மாநாடு முடிவடைந்தது

ஹராரே நவ. 8

சிம்பாப்வே நாட்டில் நடைபெற்ற 15 வளரும் நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது.

கட்டுப்பாடு அகற்றப்பட்ட சுதந்திர வர்த்தக அமைப்பின்மேல் வளரும் நாடுகள் வைத்திருந்த பெரும் நம்பிக்கை முற்றிலும் பொய்த்து விட்டதாக மாநாட்டுத் தலைவர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

சிம்பாப்வே நாட்டு அதிபர் றொபேட் முகாபே மாநாட்டில் இறுதியுரை ஆற்றினார்.

வளரும் நாடுகளுக்கு உலக வர்த்தக அமைப்பு வேதனைகளையும் பெரும் இழப்புகளையும் தந்துள்ளது எனவும் தொழிலாளர் பிரச்சினைகளையும் பிற சமூகப் பிரச்சினைகளையும் உலகவர்த்தக நிறுவனம் தனது எல்லைக்குள் உட்படுத்த மறுத்து விட்டது பெரும் துரதிர்ஷ்டவசமானது எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் ப[illegible] (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 292/[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 08-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org